பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 02 2025 **SATURDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தனிநபர் வருமான வரி உச்சவரம்பு 12 லட்சம் ரூபாய், காப்பீட்டுத் துறையில் 100 சதவீத நேரடி அந்நிய முதலீட்டுக்கு அனுமதி, பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பாடத்திட்டம் உள்ளிட்ட முக்கிய அறிவிப்புகள் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் இடம்பெறுள்ளன.

2. 140 கோடி மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. துபாயில் உள்ள தொழிலதிபர்கள் மத்திய பட்ஜெட்டை வரவேற்றுள்ளனர்.

4. குழந்தைகளுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

5. சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 8 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

>>>>>>>><<<<<<<<

மத்திய பட்ஜெட்டில், தனிநபர் வருமான வரி உச்சவரம்பு 12 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் இன்று மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், New Tax Regime திட்டத்தில் வரிசெலுத்துவோருக்கு மட்டுமே இது பொருந்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரி செலுத்துவோருக்கான உச்சவரம்பு அட்டவணையையும் அவர் விளக்கினார்.

இதன்படி 4 லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு எவ்வித வரியும் கிடையாது என்று அவர் கூறினார்.

ஆண்டு வருவாய் 4 முதல் 8 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 5 சதவீதமும், 8 முதல் 12 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 10 சதவீதமும், 12 முதல் 16 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 15 சதவீதமும், 16 முதல் 20 லட்சம் ரூபாய்வரை இருந்தால் 20 சதவீதமும், 20 முதல் 24 லட்சம் ரூபாய் வரை இருந்தால் 25 சதவீதமும், 24 லட்சம் ரூபாய்க்கும் கூடுதலாக இருந்தால் 30 சதவீதமும் வரி விதிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்ட மருத்துவமனைகளில் புற்றுநோய் பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், புற்றுநோய் மற்றும் அரியவகை நோய்களுக்கான சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு சுங்கவரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் 50 சுற்றுலா மையங்கள் மாநில அரசின் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப்பணிகளுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

காப்பீட்டுத்துறையில் நேரடி அந்திய முதலீடு 74 சதவீதத்திலிருந்து, 100 சதவீதமாக உயர்த்தப்படும் என்று அவர் கூறினார்.

வரி, மின்சாரம், நகர்ப்புற மேம்பாடு, சுரங்கத்துறை, நிதி, ஒழுங்குமுறை ஆணையங்கள் மற்றும் வேளாண் துறையில் பெரிய அளவில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வேளாண், சிறு குறு தொழில்துறை மற்றும் ஏற்றுமதி துறையின் வளர்ச்சிக்கும் முதலீடுகளை பெறுவதற்கு உத்வேகம் அளிக்கப்படும் என்றார்.

வேலைவாய்ப்புடன் கூடிய வளர்ச்சிக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வறுமையை முற்றிலுமாக அகற்றுவது, தரமான கல்வி, குறைந்த செலவில் உயர்தர சிகிச்சை போன்வற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, வளர்ச்சிடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான இலக்குகளை எட்டுவதே மத்திய அரசின் நோக்கமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

பருப்பு உற்பத்தியில் சுயசார்பினை எட்டும் நோக்கில் ஆறு ஆண்டு காலத்திற்கான இயக்கம் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சமையல் எண்ணெய் வித்துக்களுக்கான தேசிய இயக்கமும், உயர் விளைச்சல் விதை ரகங்களுக்கான தேசிய இயக்கமும் தொடங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

தோல் துறை மற்றும் காலணி உற்பத்தியின் வளர்ச்சிக்கு உத்வேகம் கொடுக்கப்படும் என்றும், அவற்றின் ஏற்றுமதியை ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிப்பதற்கு வகைசெய்யும் திட்டம் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம் 22 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

பொம்மை உற்பத்தியில் இந்தியாவை சர்வதேச முனையமாக உருவாக்குவதற்கான திட்டம் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவு பதப்படுத்துதல் துறையில் பயிற்சி மற்றும் உற்பத்திக்காக தேசிய ஆராய்ச்சி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் அடுத்த ஐந்தாண்டுகளில் 50 ஆயிரம் பள்ளிகளில் அடல் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின் கீழ் திறன் பயிற்சி வழங்குவதற்கென ஐந்து தேசிய மையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணையதள வசதி ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சிறிய அளவிலான அணுஉலைகள் அடுத்த எட்டாண்டுகளுக்குள் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

முக்கிய கனிமங்களுக்கான கொள்கை ஒன்று வெளியிடப்படும்,

மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலாக பத்தாயிரம் இடங்கள் உருவாக்கப்படும்.

தனியார் பங்களிப்புடன் மருத்துவ சுற்றுலா ஊக்குவிக்கப்படும்,

தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கென கல்வி உதவித்தொகை வழங்கப்படும்,

நம் நாட்டின் அறிவுசார் நிபுணத்துவத்தை பாதுகாக்கும் வகையில் தேசிய டிஜிட்டல் தரவு மையம் ஏற்படுத்தப்படும்,

ஏற்றுமதி மேம்பாட்டு இயக்கம் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

லித்தியம் பேட்டரிக்கான சுங்கவரி குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வரும் நிதியாண்டில் பாதுகாப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 4 லட்சத்து 91 ஆயிரம் கோடி ரூபாயாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் நிதி பற்றாக்குறை 4 புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்றும் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவித்தார்..

பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திருமதி. நிர்மலா சீதாராமன், வேளாண் ஊரக வளர்ச்சி மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளை தொடர்வதற்கு மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வருமான வரி விலக்கிற்கான உச்சவரம்பினை 7 லட்சம் ரூபாயிலிருந்து, 12 லட்சம் ரூபாயாக உயர்த்தியன்மூலம், கூடுதலாக ஒரு கோடி பேர் பயனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டு செலவினங்கள் குறைக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

மத்திய பட்ஜெட் 140 கோடி மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிப்பாதையில் முக்கியமான மைல்கல் இந்த பட்ஜெட் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சேமிப்பு, முதலீடு, நுகர்வு மற்றும் வளர்ச்சிக்கு இந்த பட்ஜெட் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வருமான வரிக்கான உச்சவரம்பு 12 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இதன்மூலம் நடுத்தர வர்க்கத்தினர் பயனடைவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

வேளாண் துறையின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள், ஊரக பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தொழில்முனைவோரின் நலனுக்கான திட்டங்களும், சிறு குறு தொழில்துறையினரின் வளர்ச்சிக்கான திட்டங்களும் இதில் இடம்பெற்றிருப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன் அட்டைக்கான உச்சவரம்பு மூன்று லட்சம் ரூபாயிலிருந்து, ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கும் விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

மத்திய பட்ஜெட்டை துபாயில் உள்ள தொழிலதிபர்களும் வரவேற்றுள்ளனர்.

அங்குள்ள இந்திய வர்த்தக கவுன்சிலின் பொதுச்செயலாளர் திரு. சத்யா சதுர்வேதி செய்தியாளர்களிடம் பேசுகையில், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக கூறினார்.

வேளாண்மை, சிறுதொழில்கள் மற்றும் நடுத்தர வர்த்தகத்தினர் ஆகியோரின் நலன்களை முன்நிறுத்தி இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேற்காசிய நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளை ஊக்குவிக்கும் வகையில் இது அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

துபாயில் உள்ள இந்திய கணக்காயத்தின் துணைத்தலைவர் திரு. ஜெய் பிரகாஷ் அகர்வால் பேசுகையில், காப்பீட்டுத் துயைில் 100 சதவீதம் வரை நேரடி அந்நிய முதலீடு அனுமதிக்கப்பட்டிருப்பதை வரவேற்றார்.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் மத்திய பட்ஜெட்டை வரவேற்றுள்ளனர்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்தை உறுதி செய்யும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாக மஹாராஷ்ட்டிர துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

மற்றொரு துணை முதலமைச்சரும், மாநில நிதியமைச்சருமான திரு. அஜித் பவாரும் இந்த பட்ஜெட்டை வரவேற்றுள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு. என். ரெங்கசாமி, மத்திய பட்ஜெட்டை வரவேற்றுள்ளார்.

>>>>>>><<<<<<<<

குழந்தைகளுக்கு புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று உலக புத்தக கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் பல்வேறு மொழிகளில் வெளியாகும் புத்தகங்கள் அந்தப் பகுதியின் கலாச்சாரத்தை அனைவரும் பகிர்வதற்கு துணைபுரிவதாக குறிப்பிட்டார்.

குழந்தைகளின் அறிவாற்றலை வளர்ப்பதற்கு அதிக அளவில் புத்தகங்கள் பதிப்பிக்கப்பட வேண்டும் என்றும் குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<<

இஸ்ரேல் நாட்டுடன் செய்து கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி, மூன்று பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் இன்று செஞ்சிலுவை சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஒருவர் மற்றும் இஸ்ரேலில் வசிக்கும் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த இருவரும் தெற்கு காஸா பகுதியில் முறைப்படி ஒப்படைக்கப்பட்டனர்.

இஸ்ரேல் நாட்டிலிருந்து இன்று 180 பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் தொடங்கியதிலிருந்து ஹமாஸ் அமைப்பினர் சார்பில் 15 பிணைக் கைதிகளும், இஸ்ரேல் தரப்பில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<<

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 8 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர்மேற்கொண்ட தீவிர தேடுதலின் போது, இந்த மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து நவீன ரக துப்பாக்கிகள், வெடிகுண்டுகளை ஏவுவதற்கான பீரங்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

>>>>>>><<<<<<<<

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அந்நாட்டு, ராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் போது தீவிரவாதிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் 18 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

நேற்று மாலை கலாத் மாவட்டத்தின் Mangocher பகுதியில் இந்த சம்பவம் நடந்ததாக அந்நாட்டு ராணுவம் உறுதி செய்துள்ளது.

உடனடியாக பாதுகாப்புப் படையினர் மற்றும் காவல்துறையினர் அப்பகுதிக்கு விரைந்து சென்று தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் 12 பேரை சுட்டுக் கொன்றதாகவும் அந்நாட்டு ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<